தாக சொல்கிறார்கள். ஆகவே இங்கே நம் மாநிலத்திலும் ஒவ்வொரு அரசுத் துறைக்கும் அல்லது ஒவ்வொரு அமைச்சர் துறைக்கும் ஒரு ஆலோசனைக் குழு அமைக்க, அமல்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30]

கடைசியாக முதல் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மிக முக்கியமான வேண்டுகோள். அரசு ஊழியர்கள் சம்பந்தமாக அவர்கள் நேற்று பதில் அளிக்கும்போதும் அல்லது நேற்று ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபோதும் திரும்பத் திரும்ப சில கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு இதை விண்ணப்பமாக தெரிவிக்கிறார்கள். அவர்கள் போலீஸாருக்கு அல்லது தீயணைப்புப் படையினருக்குச் சிலவிதமான சலுகைகளை வழங்கினார்கள். அதை வரவேற்கிறேன்.

அதேபோல் அரசுத்துறையில் இருப்பவர்களுக்கு, கடைநிலை ஊழியர்களுக்கு டாக்டர் சமரசம் அவர்கள் கூட சொன்னார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் இன்று போலிஸ்காரர்களைவிட மிக்க குறைந்த வருவாய் உள்ளவர்கள் என்று நான் கருதுகிறேன்.

அப்பேர்பட்டவர்களுக்குக் கூட மலிவு விலையில் தானியங்களை கொடுப்பது போன்றவைகளைச் செய்கிறபோது, இன்று அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள், மிரட்டுகிறார்கள் என்பதை மட்டும் கவனத்தில் கொள்ளாமல், இன்று இருக்கின்ற நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு, இந்த இரண்டையும் இணைக்கின்ற பாலமாக இந்த அரசு திகழ வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சிலருக்கு என்ன நப்பாசை இருக்கிறது என்பதல்ல பிரச்னை. இன்று அந்தச் சிப்பந்திகள் மத்தியிலே அதிகம் செலவாகிறது, தேவையிருக்கிறது. எனவே, அவர்கள் அகவிலைப்படி வேண்டுமென்று கேட்கிறார்கள், நமக்குச் சங்கடம் இருக்கிறது. ஆகவே அதை இணைக்கக்கூடிய பாலமாக இந்த அரசு திகழ வேண்டுமென்றும், இந்தப் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

6. அரசினர் தீர்மானம்

விதி 31–ஐ தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணிநேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள பேரவை விதி 31 தளர்த்தப்பட்டு, நாளை, 9-5-1981 அன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் தொடங்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

1981 மே 8]

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: நாளை தேதியிட்டு ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள வினாக்கள் பட்டியல் வேறொரு நாள் எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (9-5-1981)' காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

சட்டப் படிக்கான விதிகளும் ஆணைகளும்.

273. வருவாய்த் துறையில் 7-9-1971-ஆம் தேதியன்று வெளியாகி, 8-9-1971ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்—பாகம்—2, பிரிவு—1, பக்கம் 2ல் வெளியான II-1, 3987 (ஆ)/1971-ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 20-8-1980-ஆம் தேதியிட்டப்பெற்ற 1945-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1969—ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

274. சென்னை மாநகர், ஐவா நகரத்திற்கான விரிவான மேம்பாட்டுத் திட்டத்தை வெளியிடுவது குறித்து, வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27.9.1981—ஆம் தேதியிடப் பெற்ற 1264—ஆம் எண் அரசாணயில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971—ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புறத் திட்ட அமைப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரரவைமுன் வைக்கப் பெற்றது].

275. சென்னை மாநகர், திட்ட அமைப்புப் பகுதி 11.1 கிருஷ்ணாம் பேட்டைப் பகுதிக்கு விரிவான வளர்ச்சித் திட்டத்தை வெளியிடுவது குறித்து, வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1-10-1980-ஆம் தேதியிடப்பெற்ற 1286 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971—ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புறத்திட்ட அமைப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].